ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2421/05 - 2025 ජනවාරි මස 27 වැනි සඳුදා - 2025.01.27

*2421/05 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

வருமானப் பாதுகாப்புக் கட்டளை இல. 01/2025

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, வருமானப் பாதுகாப்புச் சட்டம்***

**கட்டளை**

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், 2025 சனவரி 28 முதல் அமுலுக்கு வரும் வகையில், கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி 2023 மார்ச்சு 24 ஆந் திகதிய 2324/49 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்பட்ட சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) அட்டவணை 'அ' இன் கீழ் பின்னிணைப்பு II இலுள்ள விலக்குகள் (இறக்குமதிகள்) பட்டியலின் விலக்கு விடய இல. 33 இனை நீக்குமாறு சுங்க பணிப்பாளர் நாயகத்துக்கு இந்த கட்டளையின் மூலம் பணிக்கின்கிறேன்*

**சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) அட்டவணை 'அ' இன் கீழ் பின்னிணைப்பு II இலுள்ள விலக்குகள் (இறக்குமதிகள்) பட்டியலின் விடய இல.33:**

*1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி விதிக்கத்தக்க வகையில் அத்தியாயம் 87 இல் விபரிக்கப்பட்டவாறான வாகனங்கள், இயந்திரங்களுடன் பொருத்தப்பட்ட அடிச் சட்டங்கள், பாகங்கள் மற்றும் வெட்டுத்துண்டுகள் ஆகியவற்றினது இறக்குமதி.*

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2025, சனவரி 27 ஆந் திகதி.

EOG 01-0281